2000 பேர் சிகிச்சை பெற்றனர்! அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது!

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாம்!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்து பார்வையிட்டார்!

புதுக்கோட்டை, அக். 29 - புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சுகாதார மாவட்டம், ஆலங்குடி வட்டம், ஆலங்குடி அரசு மகளிர் மேல் நிலை ப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாமினை, பிற்படு த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு. அருணா தலைமையில் 25.10.2025 அன்று துவக்கி வைத்து, பார்வையிட்டு, மருத்துவ பயனார்களுக்கு முழு உடல் பரிசோதனை அட்டைகள் (PIN), கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்துவமான மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டைகளையும் வழங்கினார்.

பின்னர் பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் நோயில்லா நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் பல் வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் கள். அந்தவகையில், மருத் துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறையின் சார்பில் மருத்துவ முகாம் கள் நடத்தப்படும் என்று அறிவித்து, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களி லும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத் துவ முகாமினை தொடங்கி வைத்தார்கள்.

அதன்படி, புதுக் கோட்டை மாவட்டத்தில் ஒரு வட்டாரத்திற்கு மூன்று மருத்துவ முகாம் கள் வீதம், 20252026 ஆம் நிதியாண்டில் 42 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட் டத்தில் இதுவரை 11 நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடை பெற்றுள்ளன. சராசரியாக ஒவ்வொரு முகாமிற்கும் 1,400க்கும் மேற்பட்ட மருத்துவ பயனாளிகள் கலந்து கொண்டு பயன டைந்துள்ளனர். மொத்தம் 14,550 மருத்துவ பயனாளி கள் சிறப்பு மருத்துவ சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயன டைந்துள்ளனர்.

அதனடிப்படையில் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாம் அறந்தாங்கி சுகாதார மாவட்டம், ஆலங்குடி வட்டம், ஆலங்குடி அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் மருத்து வம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை சார்பில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாம் துவக்கி வைக்கப் பட்டு, மருத்துவ பயனார்க ளுக்கு முழு உடல் பரிசோ தனை அட்டைகள் (PIN), கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங் கள் மற்றும் மாற்றுத்திறனா ளிகளுக்கு மாற்றுத்திறனா ளிகள் அடையாள அட்டைகளும் வழங்கப் பட்டுள்ளது. தனித்துவ மான

இம்முகாமில் 40 வய திற்கு மேற்பட்டோர், நீரி ழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக் கப்பட்டவர்கள், மன நல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சிக் குன்றிய குழந் தைகள், மாற்றுத் திறனாளி கள், பழங்குடியினர் மற் றும் சமூகபொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்க ளுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்ப டும். மேலும் இரத்த அழுத்த பரிசோதனை, ரத்த சர்க்கரை அளவு, சிறு நீரக செயல்பாட்டு சோத னைகள் உள்ளிட்ட பல் வேறு உயர் மருத்துவ சேவைகள் இம்முகாமில் வழங்கப்படுகிறது.

மேலும் தமிழக முதல் வர் அவர்கள் நலன் காக் கும் ஸ்டாலின் என்கிற மருத்துவ முகாமை நடத்தி வருகின்றார்கள். இந்தியா விலேயே தமிழ்நாட்டில் ம ரு த் து வ த் து றை யி ல் மாபெரும் புரட்சியை முத லமைச்சர் அவர்கள் செய்து வருகின்றார்கள். முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வரும் முன் காப்போம் என்கிற திட் டத்தை வழங்கி செயல்ப டுத்தினார்கள். ரூபாய் 4 லட்சம் வரை கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஏழைஎளிய மக்கள், அரசு மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவமனைக ளிலும், உயர் சிகிச்சை பெற வழி வகுத்தார்கள்.

கொரோனா காலத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்கள் ஏழை எளிய மக்கள் மருத்துவ வசதி கிடைக்காமல் சிரமப்பட்டு வந்தனர். இந்த நிலை மையை முதலமைச்சர் அவர்கள் மாற்றினார்கள். கொரோனாவில் முடங்கி கிடந்த மக்களுக்கு மக் களை தேடி மருத்துவம் என்கிற திட்டத்தை செயல் படுத்தினார்கள். 2 கோடி பேருக்கு மருந்து மாத்திரை களை அவர்கள் இல்லத் திற்கே கொண்டு சேர்த்த முதலமைச்சர் நமது முதல மைச்சர் அவர்கள்.

ஐநா சபை பாராட்டு கின்றது என்றால் இது எப் படிப்பட்ட திட்டம் என் பதை மகிழ்ச்சியோடு நாம் எண்ணிப் பார்க்க வேண் டும்.

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்கள் மாற்றுத்திற னாளிகள், திருநங்கைகள் என அவர்களுக்கு பெயரை சூட்டினார்கள். அந்த வழி யில் நமது முதலமைச்சர் அவர்கள் நோயாளிகளை நோயாளிகள் என அழைக் கக்கூடாது மருத்துவ பய னாளிகள் என அழைக்க வேண்டுமென அரசு ஆணை வெளியிட்டு இருக் கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித் துக் கொள்கிறேன். ஏழை எளிய மக்கள் உயர் மருத் துவ வசதி பெற வேண்டும் என்கின்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்ட மிகப்பெரிய திட்டம்தான் 'நலம் காக்கும் ஸ்டாலின்' என்கிற இந்த திட்டம் ஆகும். இங்கே 17 வகை யான மருத்துவ பரிசோத னைகள் இந்த முகாம்களில் வழங்கப்படுகிறது.

அது மட்டுமல்ல மாற் றுத்திறனாளிகள் தேசிய அடையாள அட்டை பெற வேண்டும் என்று சொன் னால் வாரந்தோறும் அவர் கள் புதுக்கோட்டைக்கு சென்று வருகின்ற நிலைமை இருந்தது. அதனை மாற்றி இது போன்ற முகாம்களிலேயே அவர்கள் தேசிய அடை யாள அட்டையும் பெற லாம். சிகிச்சை பெறலாம், நலத்திட்ட உதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்ற வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தவர் நமது முதல மைச்சர் அவர்கள் என் பதை அன்போடு தெரிவித் துக் கொள்கிறேன்.

நான் எதிர்க்கட்சி வரி சையில் சட்டமன்ற உறுப் பினராக இருந்தபோது இந்த பள்ளியில் மாணவர் கள் எல்லாம் தரையிலே அமர்ந்து படித்தார்கள். ஒரு நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்றால் மிக வும் சிரமப்பட்டு நடத்த வேண்டிய நிலைமை இருந் தது. ஆனால் அந்த நிலைமை தற்போது மாற் றப்பட்டு இருக்கிறது. இங்கே 10 புதிய வகுப்ப றைகள் ரூ.4 கோடி மதிப் பில் கட்டட பணிகள் நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. சிஎஸ்ஆர் நிதி மூலமாக ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆடிட்டோரியம் கட்டப் பட்டு வருகின்றது என்று சொன்னால் அதெல்லாம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில் தான் என்பதை எண்ணிப் பார்க்க வேண் டும். தேவையான கட்டி டங்கள் கட்டித் தரப்படும்.

அறந்தாங்கி புதுக் கோட்டை சாலையானது குறுகிய வழியாக இருந் தது. இங்கிருந்து புது க் கோட்டை செல்ல வேண் டுமானால் ஒன்றரை மணி நேரம் ஆகும் என்கின்ற நிலைமை. தற்போது 200 கோடி ரூபாய் மதிப்பீட் டில் நான்கு வழிச்சாலை யாக மாற்றுவதற்கு முதல மைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி, பணிகள் நடை பெற்று வருகிறது. இப்ப ணிகள் நிறைவடை யும் போது அரை மணி நேரத்தில் புதுக்கோட்டை செல்லலாம்.

நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்.. என 2000 ஆண்டுகளுக்கு முன்னரே கூறியவர் தெய் வப் புலவர் வள்ளுவப் பெருந்தகை அவர்கள். அவரின் பொய்யாமொ ழிக்கு இணங்க, ஏழை எளிய மக்களின் உடல் நலத்தை காத்துக் கொண்டி ருப்பவர் நமது முதல மைச் சர் அவர்கள். இந்த முகா மில் 1417 பேர் வருகை தந்து பதிவு செய்திருக்கி றார்கள். இவர்கள் அனை வருக்கும் பின் நம்பர் என்று சொல்லக்கூடிய ஒரு பதிவு எண் பதிவு செய்யப் படுகிறது. இந்த எண்ணை பயன்படுத்தி பயனாளிகள் தமிழ்நாடு முழுவதும் சிகிச்சை பெறலாம். அது மட்டுமின்றி இந்த நம்பரை கொடுத்தால் போதும். அவர்களது ரத்த வகை என்ன, சர்க்கரை அளவு என்ன, என்பதுபோன்ற அனைத்து தகவல்களும் மருத்துவர்கள் அறிந்து கொள்வார்கள். அவசர சிகிச்சை தேவைப்படும் போது இங்கு இருந்து நீங் கள் புதுக்கோட்டை செல் வதற்குள் உங்கள் உடல் நலம் பற்றிய அனைத்து தக வல்களும் அவர்களுக்கு சென்றிருக்கும். இதன் மூலம் அவசர கால உதவி மூலமாக பல உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன.

இந்தியாவில் எந்த முதல மைச்சரும் யோசித்துப் பார்க்க முடியாத அள விற்கு, ஏழை எளிய மக்கள் மருத்துவ வசதி பெற வேண்டும் என சிந்தித்து நமது முதலமைச்சர் அவர் கள் இந்த திட்டத்தை பயன்படுத்தி வருகிறார் கள். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் புதுக் கோட்டை அரசு மருத்து வக் கல்லூரி கட்டுவதற்கு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். இப் போது நமது முதலமைச்சர் அவர்கள் பல் மருத்துவக் கல்லூரியை வழங்கி இருக் கிறார்கள். கலைஞரின் கண்ணொளி திட்டத்தில் 1600 மாணவச் செல்வங் கள் சிகிச்சை பெற்று வரு கின்றனர். இன்னும் தேவைப்படுபவர்களுக்கு கண் கண்ணாடிகள் வழங் கப்படுகிறது. இந்த முகா மில் பங்கேற்றிருக்கின்ற அனைவருக்கும் சுமார் 2000 பேருக்கு உணவு ஏற் பாடு செய்யப்பட்டு இருக் கிறது. ஏற்கனவே நடை பெற்ற ஆலங்குடியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகா மிலும் கலந்து கொண்ட வர்களுக்கும் அனைவருக் கும் உணவு வழங்கப் பட்டது. மிகச்சிறப்பான ஏற்பாட்டை செய்து இருக் கின்ற நமது மாவட்ட ஆட் சித் தலைவர் அவர்களுக்கும், அதிகாரி கள் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன் றியை தெரிவித்துக் கொள் கின்றேன். இங்கே பயன டைய கூடிய பயனாளிகள் அருகாமையில் இருக்கும் மக்களுக்கும் இந்த தகவல் களை தெரிவித்து, அனை வரும் பயனடைய செய்ய வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் பேசி னார்.

இம்முகாமில் இரத்த அழுத்த பரிசோதனை மற் றும் அனைத்து பயனாளிக ளுக்கும் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, முழுமை யான இரத்த அணுக்களின் எண்ணிக்கை, இரத்த சர்க் கரை, சிறுநீரக செயல் பாட்டு பரிசோதனைகள் (யூரியா, கிரயாட்டினின்) செய்யப்பட்டு, மருத்துவ முகாமிலேயே பயனாளிக ளின் பரிசோதனை விவரங் கள் அவர்களுக்கு குறுஞ் செய்தி வாயிலாக உடனடியாக தெரிவிக்கப் படுகிறது. அனைத்து பய னாளிகளுக்கும் கண்,காது, மூக்கு (ம) தொண்டை மற் றும் பல்மருத்துவ சேவை கள் வழங்கப்படவுள்ளது மேலும், பொது மருத்துவ நிபுணரின் அறிவுறுத் தலின்படி

எக்கோ கார்டியோகி ராம் எக்ஸ்ரே (XRay), (Echo cardiogram), அல்ட்ராச வுண்ட்ஸ்கேன் (USG) மற்றும் பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் (ம) மார் பகபுற்று நோய் கண்டறி யும் பரிசோதனைகளும் செய்யப்பட்டது.

மேலும், இம்முகாமில் பங்கு கொள்ளும் மருத் துவ பயனாளர்களுக்கு 17 சிறப்பு மருத்துவ நிபுணர் களை கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட் டது. பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இருதய மருத் துவம், எலும்பியல் மருத்து வம், நரம்பியல் மருத்து வம், தோல் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், இயன் முறை மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத் துவம், மனநல மருத்துவம், குழந்தைகள் நலமருத்து வம், நுரையீரல் மருத்து வம், நீரிழிவுநோய் மருத்து வம், ஸ்கேன், எக்கோ பரிசோதனைகள் மற்றும் மருத்துவ சேவைகள் மட்டு மின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப் பீட்டு திட்டத்தின் கீழ்பதிவு செய்தல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக் கான அரசு அங்கீகார சான் றிதழ்கள் இம்முகாமி லேயே வழங்கப்பட்டது. 2000க்கும் மேற்பட்டோர் இம்முகாமில் ஆர்வமுடன் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றுக்கொண்டனர்.தமி ழக முதல்வர், துணை முதல்வர் மற்றும் பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ மெய்ய நாதன் ஆகியோருக்கு நன் றியை தெரிவித்துக் கொண் டனர்.

இந்நிகழ்வில், ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் மு.ராசி முருகானந்தம், அறந்தாங்கி மாவட்ட சுகா தார அலுவலர் மருத்துவர் விஜயகுமார், ஆலங்குடி செயல் அலுவலர் இ. கோமதி, ஆலங்குடி வட் டாட்சியர் பி.வில்லியம் மோசஸ், திருவரங்குளம் வட்டார வளர்ச்சி அலுவ லர்கள் முத்துராமன், ரமேஷ், வட்டார மருத் துவ அலுவலர்கள் மரு. ராம்சந்தர், மரு.கீர்த்தனா, பெற்றோர் ஆசிரியர் கழ கத் தலைவர் கே.பி.கே.டி. தங்கமணி, தலைமையாசிரி யர் கௌசல்யா, த.சந்திர சேகரன், க.மதியழகன், அரு.வடிவேல், ஆர்.வி. செல்வம், மருத்துவ பணி யாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருவெறும்பூர் தொகுதியில் மக்களுக்காக அன்பில் அறக்கட்டளை அப்பல்லோ மருத்துவமனையுடன் இணைந்து மாபெரும் இலவச மருத்துவ முகாமினை திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருவெறும்பூர் வேங்கூர் நாக திருமண மண்டபத்தில் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர் கருணாநிதி, மருத்துவர்கள் சுரேஷ், தமிழரசன், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அன்பில் அறக்கட்டளை - அப்போலோ மருத்துவமனை இணைந்து நடத்தும் மருத்துவ முகாம்!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்!

திருச்சி, அக். 29 - திருவெறும்பூர் தொகுதி யில் மக்களுக்காக அன் பில் அறக்கட்டளை அப் பல்லோ மருத்துவமனை யுடன் இனைந்து மாபெ ரும் இலவச மருத்துவ முகாமினை திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யா மொழி திருவெறும்பூர் வேங்கூர் நாக திருமண மண்டபத்தில் வேங்கூர் , நடராஜபுரம், அரசங்குடி, கிருஷ்ண சமுத்திரம், திரு நெடுங்குளம், வாழவந் தான்கோட்டை, கிளியூர், பத்தாளப்பேட்டை, பனை யகுறிச்சி, குவளக்குடி, முல் லைக்குடி, ஆகிய பகுதியில் வசிக்கும் மக்களுக்காக துவக்கி வைத்தார்.

முகாமில் ரத்தத்தில் சர்க் கரையின் அளவு, ரத்த அழுத்தம் சரிபார்த்தல், இசிஜி எடுத்தல், நுரையீரல் பரிசோதனை நடைபெறுகி றது பொது மருத்துவர் ஆலோசனை வழங்கப்படு கிறது .

முகாமில் அன்பில் அறக் கட்டளையின் சார்பாக முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு முதலு தவி பெட்டி வழங்கப் பட்டது .

இந்நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர் கருணா நிதி, மருத்துவர்கள் சுரேஷ், தமிழரசன், கழக நிர்வாகி கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பள்ளிக்கல்வித்துறை சார்பில் காஞ்சிபுரம் மாவட்டத்தில்

2025-26-ஆம் ஆண்டிற்கான கலைத் திருவிழா போட்டிகள்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. – மாவட் ஆட்சியர் தொடங்கி வைத்தனர்!

சென்னை, அக். 29 - 2022-23 மற்றும் 2024-25-ஆம் ஆண்டுகளின் சட் ட ம ன் ற கூட்டத்தொடரில் பள் ளிக் கல்வித்துறை மானி யக் கோரிக்கையில் பள் ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பின்படி, கலைத் திருவிழாப் போட்டிகள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நடத் தப்பட்டு வருகிறது.

அதன்படி நேற்று முன்தினம் (27.10.2025) காஞ்சிபுரம் மாவட்டம், பள்ளிக்கல்வித்துறை சார் பில், ஒருங்கிணைந்த பள்ளி கல்வி திட்டத்தின் கீழ் 2025-26-ஆம் ஆண் டிற்கான மாவட்ட அளவி லான கலைத் திருவிழா போட்டிகள் கீழ்கதிர்பூர் ஊராட்சியில் உள்ள தனி யார் பள்ளியில் உள்ள கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சித் தலை வர் திருமதி கலைச்செல்வி மோகன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

காஞ்சிபுரம் மாவட் டம் ஒருங்கிணைந்த பள் ளிக் கல்வி திட்டத்தின் கீழ் 2025-26- ஆம் ஆண் டிற்கான கலைத் திருவி ழாப் போட்டிகள் 1-ஆம் வகுப்பு முதல் 12 -ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்க ளின் கலை திறனை வெளிப்படுத்தும் வகை யில் கடந்த மூன்று ஆண் டுகளாக பள்ளி, வட்டா ரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத்தி ருவிழா போட்டிகள் நடைபெற்று வருகிறது. அதனைத் தொடர்ந்து இவ்வாண்டு அரசு மற் றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 -ம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங் கேற்கும் வகையில் கலை திருவிழா போட்டிகள் நடைபெறுகிறது .

2022-23ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பல் வேறு கலை வடிவங்களை அறிமுகப்படுத்தி மாண வர்கள் கலைத்திறன்களை வெளிக்கொணரும் வித மாக பள்ளிக்கல்வி செயல் பாடுகளின் ஒரு பகுதி யாக அரசு பள்ளி மாண வர்களுக்கு கலை சார்ந்த பயிற்சிகள் கலையரங்க செயல்பாடுகள் மூலம் வழங்கப்பட்டு 6ம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பள்ளி அளவிலும், வட்டாரம் அளவிலும், மாவட்டம் அளவிலும் மற்றும் மாநில அளவிலும் கலைத்திரு விழா போட்டிகள் நடத் தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுக ளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மாநில அளவில் "கலை யரசன்" மற்றும் "கலைய ரசு" என்ற பட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு முதல மைச்சர் அவர்களால் விரு துகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. மேலும் மாநில அளவில் கலைத்தி ருவிழா போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாண வர்கள் வெளிநாடு கல்வி சுற்றுலா அழைத்து செல் லப்பட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து 2024-2025 ஆண்டு நடை பெற்ற கலைத்திருவிழா போட்டிகளில் பள்ளி அளவில் 69,160 மாணவர் களும், வட்டார அளவில் 7,832 மாணவர்களும் மாவட்ட அளவில் 1,030 மாணவர்களும், மாநில அளவில் 316 மாணவர்க ளும் பங்குபெற்று தங்கள் திறமைகளை வெளிப்ப டுத்தினர். மாநில அளவில் நடைபெற்ற போட்டிக ளில் நமது காஞ்சிபுரம் மாவட்டத்தில் களிமண் பொம்மைகள் மற்றும் பறை இசை போட்டிக ளில் மாநில அளவில் முத லிடத்திலும், நாட்டுப்புற நடனம் குழு, தனி நபர் நடிப்பு, பவணை நடிப்பு ஆகிய போட்டிகளில் மாநில அளவில் இரண் டாம் இடத்திலும் வெற்றி பெற்று சாதனை புரிந்துள்ளார்கள்.

மாநில அளவில் "கலை யரசன்" மற்றும் "கலைய ரசு" என்ற பட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு முதல மைச்சர் அவர்களால் விரு துகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டது

இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு 2025-26, மாணவர்களிடம் மறைந் திருக்கும் திறமையை வெளிக்கொணரும் வகை யில் நடைமுறையில் உள்ள கலை மரபுகள் பற்றி அவர்களுக்கு கற்பிக் கவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கலை வடிவங்களில் தங்கள் திற மைகளை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தவும் கலை திரு விழா போட்டிகள் "பசு மையும் பாரம்பரியமும்" என்ற மையக்கருத்தின் அடிப்படையில் திட்ட மிட்டு நடத்தப்பட்டு வரு கிறது.

இந்நிகழ்ச்சியில், காஞ் சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் துணைத் தலைவர் திருமதி. நித் தியா சுகுமார், காஞ்சிபு ரம் ஒன்றிய குழுத் தலை வர் திருமதி.மலர்க்கொடி குமார், முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. அ. நளினி (கூடுதல் பொறுப்பு), மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) திருமதி. டி. கோமதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், வடகாடு ஊராட்சி செட்டிக்குளம் ஊரணியை ரூ.7 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தி பசுமை பூங்கா அமைக்கும் பணியினை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 24.10.2025 அன்று அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.